


**05.03.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. கல்வி திறன்மேம்பாடு சுகாதாரம் ஆகியவை நாட்டின் தொலைநோக்கு வளர்ச்சிக்கான முக்கிய தூண்களாக திகழ்கிறது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. நாட்டின் தொழில்நுட்ப ஆளுமையின் முக்கிய அம்சமாக படைப்பாற்றல் திறன் திகழ்கிறது என்று மத்திய தொலை தொடர்புத்துறை அமைச்சர் திரு.ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

3. மகளிருக்கு உகந்த மாதிரி கிராம பஞ்சாயத்து திட்டம் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு புதுதில்லியில் இன்று அறிமுகம் செய்யப்பட்டது.

4. மக்களவை தொகுதி மறுசீரமைப்பு 30 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட வேண்டும் என்று கோரும் தீர்மானத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அனைத்து கட்சி கூட்டத்தில் இன்று முன்மொழிந்தார்.

5. ஐ.சி.சி. சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது அரையிறுதியில் தென்னாப்பிரிக்கா இன்று நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

**********

<u>பிரதமர்</u>

மக்களின் கல்வி திறன்மேம்பாடு சுகாதாரம் ஆகிய 3 அம்சங்கள் நாட்டின் தொலைநோக்கு வளர்ச்சிக்கான முக்கிய தூண்களாக திகழ்கிறது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

வேலை வாய்ப்பு தொடர்பான பட்ஜெட்டிற்கு பிந்தைய இணையவழி கருத்தரங்கில் காணொலி மூலம் தற்போது உரையாற்றி வரும் அவர் பல தசாப்தங்களுக்கு பின்னர் நம் நாட்டின் கல்வி முறை மிக்பெரிய மாற்றங்களுடன் முன்னேற்றப்பாதையில் செல்வதாக தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பிரதமர் தொடர்ந்து உரையாற்றிவருகிறார்.

**********

ஜோதிர் ஆதித்ய சிந்தியா

நாட்டின் தொழில்நுட்ப ஆளுமையின் முக்கிய அம்சங்களாக படைப்பாற்றல் திறன், உள்ளடக்கம், நிலைத்தன்மை, நம்பகதன்மை போன்றவை திகழ்வதாக மத்திய தொலை தொடர்புத்துறை அமைச்சர் திரு.ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

ஸ்பெயின் பார்சிலோனா நகரில் சர்வதேச கைப்பேசி மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர், குடிமக்கள் சேவையை ஆதாரும், பாரத் இணையதளமும் வெற்றிகரமாக முன்னெடுத்து செல்வதாக சுட்டிக்காட்டினார்.

அலைக்கற்றை மேலாண்மை, சந்தை நிலைத்தன்மை, தொலைதொடர்பு ஒழுங்குமுறை நடவடிக்கைகள், சைபர் பாதுகாப்பு ஆகிய நான்கையும் சமநிலையுடன் இந்தியா அணுகுவதாக அவர் கூறினார்.

இந்நிகழ்வின் ஒருபகுதியாக நம் நாட்டின் மென்பொருள், வன்பொருள், பிரிவுகளில் நவீன தொழில்நுட்பங்களை எடுத்துரைக்கும் கைபேசி கண்காட்சி தளத்தையும் திரு.ஜோதிர் ஆதித்ய சிந்தியா தொடங்கிவைத்தார்.

**********

பஞ்சாயத்துராஜ் அமைச்சகம்

புதுதில்லி விஞ்ஞான்பவனில் மகளிருக்கு உகந்த கிராம பஞ்சாயத்து திட்டத்தை மத்திய பஞ்சாயத்து ராஜ் இணை அமைச்சர் திரு.எஸ்.பி.சிங்.பாகேலும், சுகாதார துறை இணை அமைச்சர் அனுப்பிரியா பட்டேலும் தொடங்கிவைத்தனர்.

சர்வதேச மகளிர் தின கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஒரு மாதிரி மகளிர் பஞ்சாயத்து அமைப்பை நிறுவுவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

பாலின சமத்துவம் மற்றும் மகளிர் ஆளுமையை முன்னிறுத்த இது வழிகோலுகிறது.

பல்வேறு அமைச்சகங்கள் துறைகள் சர்வதேச அமைப்புகளை சேர்ந்த பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர்.

**********

நிலக்கரி

தேசிய வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் பங்களிக்கும் வகையில் நிலையான வலுவான நிலக்கரி தொகுப்பை உறுதி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக நிலக்கரி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் வர்த்தக சுரங்கங்கள் மூலமான நிலக்கரி உற்பத்தி நடப்பாண்டின் சென்றமாதம் இறுதிவரை 167 மில்லியன் டன்னை எட்டியுள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது சென்ற ஆண்டின் இதேகாலத்தை விட 32 சதவிகிதம் அதிகமாகும் என்றும் கூறியுள்ளது.

நிலக்கரி விநியோகமும் 170 மில்லியன் டன்னை தாண்டியுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சகம் இது சென்ற ஆண்டை விட 42 மில்லியன் கூடுதலாகும் என்றும் எடுத்துரைத்தது.

மின்சாரம், எஃகு சிமெண்ட் பிரிவுகளுக்கு தடையற்ற நிலக்கரி விநியோகம் உறுதி செய்யப்படுவதாக நிலக்கரி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**********

<u>முதலமைச்சர்</u>

மக்களவை தொகுதி மறுசீரமைப்பு 30 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட வேண்டும் என்று கோரும் தீர்மானத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இதுதொடர்பான அனைத்து கட்சி கூட்டத்தில் இன்று முன்மொழிந்தார்.

சென்னையில் தொகுதி மறு சீரமைப்பு தொடர்பாக தமிழக அரசு அழைப்பு விடுத்திருந்த அனைத்து கட்சி கூட்டத்தில் உரையாற்றிய அவர், 1971ஆம் ஆண்டு மக்கள் தொகையின் அடிப்படையிலான தொகுதி வரையறை மேலும் 30 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட வேண்டும் என்று கோரினார்.

தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களின் தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்த தேவையான அரசியல் சட்ட திருத்தத்தை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கோரும் தீர்மானத்தையும் முதலமைச்சர் முன்மொழிந்தார்.

தொகுதி மறுசீரமைப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த கூட்டு நடவடிக்கை குழு அமைப்பதற்கான தீர்மானத்தையும் முதலமைச்சர் கொண்டுவந்தார்.

இந்த தீர்மானங்களின் மீதான கருத்தை அனைத்து கட்சி தலைவர்களும் பதிவு செய்ய வேண்டும் என்றும் முதலமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் காங்கிரஸ், அஇஅதிமுக, பா.ம.க, தேமுதிக, த.வெ.க உள்ளிட்ட கட்சிகள் பங்கேற்றன.

பிஜேபி, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிகள் இந்த கூட்டத்தை புறக்கணித்தன.

**********

<u>முத்துசாமி:</u>

ஈரோடு மாநகராட்சிக்கு விதிக்கப்பட்ட கூடுதல் வரியை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாநில வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.முத்துசாமி தெரிவித்திருக்கிறார்.

ஈரோட்டில் இன்று நடைபெற்ற சமூக வளைகாப்பு நிகழ்ச்சியில் பேசிய அவர், மாநகராட்சியில் தெரிவிக்கப்பட்டுள்ள குறைகள் விரைவில் களையப்படும் என்றார்.

**.....வாய்ஸ்....**

இந்நிகழ்ச்சியில் கர்ப்பிணி பெண்களுக்கு நலதிட்ட உதவிகளை வழங்கிய அமைச்சர் மாற்றுத்திறனாளிகளுக்கு 12 லட்ச ரூபாய் மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட வாகனங்களை வழங்கினார்.

**********

தவக்காலம்

சாம்பல் புதன் தினம் உலகம் முழுவதிலும் உள்ள கிறிஸ்தவர்களால் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இயேசு கிறிஸ்த்துவின் சிலுவைப்பாடுகளை தியானிக்கும் வகையில் 40 நாட்கள் தவலக்காலத்தின் அடையாளமாக கிறிஸ்தவ தேவாலயங்களில் இன்று நடைபெற்ற சிறப்பு திருப்பலியில் மக்களின் நெற்றியில் சாம்பலால் திருசிலுவை வரையப்பட்டு பிரார்த்தனைகள் தொடங்கின.

வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலயத்தில் சாம்பல் புதன் சிறப்பு திருப்பலி இடம்பெற்றதாக எமது நாகை செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, திருச்சி உள்ளிட்ட பகுதிகளின் தேவாலயங்களில் சாம்பல் புதன் இன்று கடைபிடிக்கப்பட்டது.

**********

11ஆம் வகுப்பு தேர்வுகள்

தமிழ்நாட்டில் 11ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகள் மொழிதாளுடன் இன்று தொடங்கின.

வரும் 27ஆம் தேதிவரை நடைபெறும் இத்தேர்வை மாநிலம் முழுவதும் மூவாயிரத்து 316 மையங்களில் 8 லட்சத்து 23 ஆயிரம் மாணாக்கர் எழுதுகின்றனர்.

திருச்சி இ.ஆர்.பள்ளியில் நடைபெற்ற தேர்வை பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்று நேரில் சென்று பார்வையிட்டார்.

தேர்வு ஏற்பாடுகள் குறித்து ஆசிரியர்களிடம் கேட்டறிந்தார்.

**********

சிறுத்தை

கோவை பாரதியார் பல்கலைகழக வளாகத்தில் சிறுத்தை நடமாடுவதாக வெளியான தகவலை அடுத்து பல்கலைகழக மாணாக்கருக்கு இன்று விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே சிறுத்தை கால்தடத்தின் மூலம் அதனை பாதுகாப்பாக பிடிப்பதற்கான தேடுதல் பணிகளை வனத்துறை மேற்கொண்டுள்ளது.

மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டி அமைந்துள்ள மருதமலை சாலையில் உள்ள இப்பல்கலைகழகத்தில் சிறுத்தை புகுந்திருப்பதாக கூறப்படுவதை அடுத்து அப்பகுதி பரபரப்பாக காணப்படுகிறது.

**********

சிவகங்கை:

சிவகங்கை மாவட்டத்தில் மாதந்தோறும் 4-வது சனிக்கிழமைகளில் பிளாஸ்டிக் சேகரிப்பு மற்றும் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ‘ா அஜித் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்….

…..வாய்ஸ்…

**********

<u>இருவரி</u>

திருப்பத்தூர் மாவட்டத்தில் வேளாண் அடுக்கு திட்டத்தின் கீழ் விவசாயிகள் வரும் 31ஆம் தேதிக்குள் பொது சேவை மையங்களில் தங்கள் தரவுகளை உள்ளீடு செய்துகொள்ளலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையத்தில் பிரதமரின் தொழிற்பயிற்சி திட்டத்தின் கீழ் வரும் 11ஆம் தேதி சிறப்பு முகாம் நடைபெறுகிறது.

10ஆம் வகுப்பு மேல் படித்த 21 வயதுமுதல் 24 வயதிற்குட்பட்டோர் இதில் பங்கேற்று பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் டாக்டர் உமா தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி திருநெல்வேலி இடையே காலை 10 மணி மற்றும் இரவு 8.30க்கு இயக்கப்படும் ரயில்கள் நாளைமுதல் ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

தூத்துக்குடி மீளவிட்டான் ரயில் நிலையங்களில் இருப்புபாதை பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால் இந்நடவடிக்கை.

**********

<u>திருச்செந்தூர்:</u>

திருச்செந்தூர் சுப்ரமணிய திருக்கோவில் கடற்கரையில் ஏற்பட்டுள்ள கடல் அரிப்பை தேசிய கடலோர ஆராய்ச்சி மைய இயக்குநர் இன்று ஆய்வு செய்தார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்….

…..வாய்ஸ்…

**********

<u>கோவில்</u>

திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் பங்குனி பெருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

முன்னதாக உற்சவர் சன்னதியில் 16 வகை மங்கள பொருட்களால் சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்றன.

முக்கிய நிகழ்வான சூரஸம்ஹாரம் வரும் 16ஆம் தேதியும், திருக்கல்யாண உற்சவம் 18ஆம் தேதியும் தேரோட்டம் 19ஆம் தேதியும் நடைபெறும்.

**********

<u>வானிலை</u>

தமிழ்நாட்டில் அடுத்த ஐந்து நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை படிப்படியாக 2 டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் இன்று ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

**********

<u>கிரிக்கெட்</u>

ஐ.சி.சி. சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது அரையிறுதியில் தென்னாப்பிரிக்கா இன்று நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

பிற்பகல் இரண்டரை மணிக்கு லாகூரில் இந்த போட்டி தொடங்குகிறது.

இதில் வெற்றிபெறும் அணி வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இறுதி ஆட்டத்தில் இந்தியாவுடன் மோதும்.

**********

<u>ஸ்டீவ் ஸ்மித்</u>

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் ஸ்டீவ் ஸ்மித் ஒருநாள் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இருப்பினும் டெஸ்ட் மற்றும் 20-20 போட்டிகளில் அவர் தொடர்ந்து விளையாடுவார்.

ஐ.சி.சி. சேம்பியன் கோப்பை அரையிறுதியில் இந்தியாவிடம் 4 விக்கெட் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியா தோல்வியடைந்ததை அடுத்து ஸ்மித் இந்த முடிவை மேற்கொண்டார்.

**********